1974 சனவரி 28]

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள "பாம்கர் பெடரேஷன்" லிக்குடேட் செய்யப்பட்டதால் அதிலே வேலை செய்துகொண்டிருந்தவர்கள் இப்பொழுது வேலையிழந்து இருக்கிறார்கள். அவர்கள் அரசுக்கு ரெப்ரசெண்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த ரெப்ரசண்டேஷன் அடிப்படையில் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அவர்கள் அரசாங்கத்திடம் முறையீடு செய்திருக்கிறார்களா, இல்லையா என்ற தகவல் இப்பொழுது என்னிடத்திலே இல்லை. ஆனால் வேலையிழந்தவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வரும்பொழுது அவர்களுக்கு முதல் சலுகை அளித்து வேலைகளைக் கொடுக்கலாம்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, இந்த மாவட்ட சம்மேளனங்கள் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அது மாதிரி ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு நஷ்டம் என்று வரிசைப்படுத்தி சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்ட வாரியாகச் சொல்ல வேண்டுமென்றால், 1951-52-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலும், பிறகு மற்ற மாவட்டங்களிலும் ஆரம்பித்தார்கள் அதிலே ஒவ்வொரு ஆண்டும் நஷ்டமாக வந்திருக்கிறது. 1972-73-ல் மட்டும் 3,90,100 ரூபாய் கோவை மாவட்ட சம்மேளனத்தில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சென்னை மாவட்டத்தில் 1,88,244 ரூபாய் நஷ்டம். திருச்சியில் 5,79,846 ரூபாய் நஷ்டம். திருநெல்வேலியில் 17,32,002 ரூபாய், இது 1972-73-ஆம் ஆண்டில். அதேபோல் இராமநாதபுரம், மதுரை மாவட்டத்தில் 24,575 ரூபாய் அந்த சம்மேளனத்தில் இந்த ஆண்டு மட்டும் லாபம் வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 96,277 ரூபாய் நஷ்டம். சேலம் மாவட்டத்தில் 10,75,000 ரூபாய் நஷ்டம். இப்படி எல்லா மாவட்டங்களிலுமுள்ள சம்மேளனங்களிலே நஷ்டக் கணக்கைத்தான் காண்பித்திருக்கிறார்கள்.

Cows secured by Dairy Development Corporation

* 210 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether bulls and cows have been secured by the Tamil Nadu Dairy Development Corporation from foreign countries during the calendar year 1973 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) கன்று போடாத பதினைந்து இளம் பசுக்களும், பதினான்கு காளைகளும் அயல் நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு அவை உதக மண்டலத்தில் வளர்த்து வரப்படுகின்றன. கன்று போடாத பதினைந்து இளம் பசுக்களும், இரண்டு காளைகளும் டென்மார்க் நாட்டிலிருந்தும், பன்னிரண்டு காளைகள் அமெரிக்க நாட்டிலிருந்தும் பெறப்பட்டன.

திரு. என். டென்னிஸ் : அவை என்ன விலைக்கு வாங்கப்பட்டன? இப்போதும் டெய்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் உபயோகத்தில் தான் இருக்கிறதா? சில விற்கப்பட்டனவாகக் கூறப்படுகிறது. என்ன விலைக்கு விற்கப்பட்டன? தனிப்பட்டவர்களுக்கா, பொது நிறுவனங்களுக்கா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வாங்கப்பட்ட விலையின் விவரம் இல்லை. பால்வளப் பெருக்குத் திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழகப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வாங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கால்நடைகளை வாங்குவதற்கும் பொலி காளைப் பண்ணை வைப்பதற்கும் பால் பண்ணைத் திட்டத்தின்கீழ் 4 லட்சம் ரூபாய் நிதியாக ஒதுக்கி இருக்கிறார்கள். விற்கப்பட்டவையைப் பொறுத்தவரை பெரும் பாலும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் விற்கப்பட்டிருக்கின்றன. தனிப் பட்டவர்களுக்கு விற்கப்பட்டனவா இல்லையா என்று தகவல் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ப்யூர் ஜெர்சி, ப்யூர் ப்ரீஷியன் போன்ற வெரைட்டிகளை வரவழைப்பதற்கும் இன விருத்தி செய்வதற் கான ஏற்பாடுகளுக்கும் திட்டமிடப்பட்டிருக்கிறதா ? எல்லா மாவட்டங் களிலும் அமல் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வெளிநாட்டிலிருந்து ஜெர்சி இனங்களைத் தான் இறக்குமதி செய்கிறோம். சராசரி 5 முதல் 6 லிட்டர் பால் வரை கொடுக்குமென்ற நோக்கோடு இறக்குமதி செய்கிறோம். இன்னும் தீவிரமான முறையில் "ஃப்ரோஸன் செமன்" என்ற திட்டத்தினை கொடைக்கானல் பகுதியில் இங்கிலாந்து நாட்டின் உதவி யோடு அமைத்திட மத்திய அரசாங்கத்தோடு கலந்து முயற்சிகள் செய்து வருகிறோம். இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் நல்ல இனங்களை உற்பத்தி செய்ய முடியும் என்ற நோக்கோடு தமிழ்நாடு பால்வளத் துறை அக்கறை செலுத்தி வருகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : இவைகள் ஊட்டியில் கார்ப்பரேஷன் நேரடிப் பார்வையில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ? எப்போது செர்விசுக்கு வரக்கூடிய நிலைமை இருக்கும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கார்ப்பரேஷனுடைய நேரடிப் பார்வையில்தான் ஊட்டி பண்ணையில் வைத்திருக்கிறோம். எப்போது வரும் என்று தெரியவில்லை.

1974 சனவரி 28]

THIRU B. VENKATASWAMY: We are in dearth of high-breed bulls? May I know from the Hon. Minister whether this frozen semen will be distributed throughout the State so that we could have very good breed of animals?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: "ஃப்ரோஸன் செமன்" தயார் செய்வதைப் பொறுத்தவரை தற்போது இங்கிலாந்து நாட்டிலிருந்து நம்முடைய அமுல் பால் பண்ணையில்தான் முதலாவதாக வாங்கி விநியோகம் செய்தார்கள். தமிழ்நாட்டிலும் சில பகுதிகளுக்கு முன் மாதிரியாக விநியோகம் செய்வதற்கு பால் பண்ணைக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு பூராவும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முயற்சி எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டிருப்பது குறித்துப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தொடங்குமுன் பேரவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய பேரவை உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மாண்புமிகு திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களுக்கு "பத்மஸ்ரீ" விருது நம் நாட்டு குடியரசுத் தலைவரவர்களால் அளிக்கப்பட்ட செய்தி நம் அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும். இதை இம்மாமன்றம் மகிழ்ச்சியோடு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. (கரவொலி).

திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கடந்த 30 ஆண்டு காலத்திற்கும் மேல் பொதுவாழ்விலே ஈடுபட்டு அருந்தொண்டு ஆற்றி வருபவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சேரிவாழ் மக்களுக்கும் அவர்கள் சிறந்த சேவை புரிந்துள்ளார்கள். இப்பேரவையில் அனுபவம் ஆற்றலும் மிக்க உறுப்பினராக இருந்து அவர்கள் அரும்பணி ஆற்றி வருகிறார்கள். இனிமையாகப் பழகி எல்லாருடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களாக அன்னார் விளங்குகின்றார்கள். இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் அவர்களுக்கு நல்வாழ்த்துதலையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.